# VIRUTCHAM MICROFINANCE LIMTED - விருட்சம் மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட்

## FAIR PRACTICE COD- நன்னடத்தை விதிமுறைக் கொள்கை

1. **முன்னுரை :**

விருட்சம் மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் இந்திய கம்பெனி சட்டத்தின் கீழ் பதியப்பெற்று இந்திய ரிசர்வ் வங்கியின் NBFC MFI உரிமம் பெற்ற நிறுவனமாகும்.

இந்திய ரிசர்வ் வங்கியானது NBFC என்று சொல்லப்படும் வங்கி-சாரா நிதி நிறுவனங்களுக்கான நன்னடத்தை விதிமுறைகளை (FPC) பல்வேறு தேதிகளில் தனது சுற்றறிக்கைகளில் வெளியிட்டது. நிதிநிறுவனங்கள் கடன் வழங்கும் போது தேவையான தகவல்கள், அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வெளியிட வேண்டும். மேலும் அதில் பொதுவான கொள்கைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டுமென்றும் மற்றும் அதில் ஒரு துஷ்பிரயோகமில்லாத கடன் மீட்பு முறையும் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்றும் அந்த வழிகாட்டுதல்கள் (FPC) தெரிவிக்கிறது.

2. **NBFCகளின் நியாயமான நடைமுறைகள் குறியீடு குறித்த வழிகாட்டுதல்கள்.**

**(i) கடன் விண்ணப்பம் மற்றும் அதனை பரிசீலிக்கும் முறை**

(அ) கடன் வாங்குபவருக்கான அனைத்து தகவல்களும் அவர்கள் பிராந்திய மொழியில் அல்லது அவர் புரிந்துகொள்ளும் மொழியில் இருக்கும்.

(ஆ) விருட்சம் கடன் விண்ணப்ப படிவங்களில் கடன் வாங்குபவர் அறிய விரும்பும் தேவையான தகவல்கள் இருக்கும். இதன் மூலம் மற்ற NBFCகள் வழங்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ஒரு அர்த்தமுள்ள ஒப்பீடு செய்யப்படலாம் மற்றும் கடன் வாங்கியவரால் தகவலறிந்த முடிவை எடுக்க முடியும். கடன் விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் விபரம் கடன் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

(இ)கடன் விண்ணப்பம் பெற்றதற்கான ஒப்புகை சீட்டினை விருட்சம் வழங்கும். எத்தனை நாட்களுக்குள் கடன் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**(ii) கடன் பரிசீலனை மற்றும் விதிமுறைகள் / நிபந்தனைகள் :**

- வாடிக்கையாளர்களுடன் நியாயமாகவும், வெளிப்படையாகவும், இருக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கையாகும். கடன் வாங்குபவருடனான அனைத்து தகவல் தொடர்புகளும் அவரின் பிராந்திய மொழியில் இருக்கும். கடன் வழங்குதல் தொடர்பான அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் தெளிவாக எழுத்துப்பூர்வமாக வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் இரண்டு நாட்கள் கட்டாய இலவச பயிற்சி வழங்கப்படுகிறது. அப்போது, விருட்சம் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து வாடிக்கையாளர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இதனால் வாடிக்கையாளர்கள் தகவல்களை நன்கு அறிந்து கொண்ட பின்பு கடன் குறித்த முடிவை எடுக்க இயலும்.
- கடன் கோரிய விண்ணப்பங்கள் நிறுவனத்தின் உள் செயல்முறையில் பரிசீலிக்கப்படும். மேலும், கடன் வழங்குவதற்கு அல்லது வழங்க அனுமதிப்பதற்கு முன்பாக ஒரு கடன் பணியக நிறுவனத்தின் (Credit Bureau) பரிசோதனையும் மேற்கொள்ளப்படும். இந்த செயல்முறைகளை கடக்காத விண்ணப்பங்கள் தாமாகவே நிராகரிக்கப்படும். ஒரு வேளை கடன் நிராகரிக்கப்படும் பட்சத்தில், விருட்சம் அந்த முடிவை வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்திவிடும்.

- அளவுக்கு அதிகமாக கடன்படுதல் மற்றும் அதிகமாக கடன் வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்க, விருட்சம் கடன் பணியகங்களில் (Credit Bureaus) பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் உட்பதிவேடுகள் மற்றும் பரிசீலனை முறைகளுடன் சேர்த்து கூடுதலாக, ஒவ்வொரு வாடிக்கையாளரின் தற்போதைய கடன் அளவு மற்றும் திரும்பி செலுத்திய வரலாறு ஆகியன அடங்கிய புள்ளிவிவரங்களும் பயன்படுத்தப்படும். இதன் மூலம் அவர் கடன் பெறுவதற்கான தகுதியும் மதிப்பாய்வு செய்யப்படும்.

**(iii) கடன்களை வழங்குதல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்கள்**

(அ) தள்ளுபடி அட்டவணை, வட்டி விகிதங்கள், சேவை கட்டணங்கள், முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள் போன்றவை உட்பட நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், விருட்சம் கடன் வாங்குபவருக்கு அவரது பிராந்திய மொழியில் அதுகுறித்த அறிவிப்பினை வெளியிடும். வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எதிர்காலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுவதை விருட்சம் உறுதி செய்கிறது. இது தொடர்பான உரிய நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் இணைக்கபட்டிருக்கும்.

(ஆ) ஒப்பந்தத்தில் சொல்லபட்டவைகளை செயல்படுத்துதல் அல்லது திரும்ப பெறுதல் சம்பந்தமான முடிவுகள் எடுக்கப்படும் போது அவை கடன் ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு இணக்கமாக இருக்க வேண்டும்.

(இ) விருட்சம் அதன் நுண் நிதி கடன்களுக்கு அடமானம் ஏதும் பெறாமல் கடன் வழங்கும். முன்கூட்டியே கடனை திருப்பி செலுத்தும் போது அபராதம் விதிக்கப்படாது.

(ஈ) நுண் கடன் தவிர்த்த இதர கடன்களுக்கு அடமானமாக பெற்றுக்கொண்டவைகளை முழுக் கடனையும் செலுத்தி முடித்தவுடன், சட்டபூர்வமாக வேறு ஏதும் உரிமை அந்த அடமானத்தின் மீது விருட்சத்திற்கு இல்லாதிருக்கும் பட்சத்தில், அவற்றை விடுவிக்கும். ஒருவேளை அடமானத்தின் மீது விருட்சம் நிறுவனம் சட்டபூர்வ உரிமையை செயல்படுத்தும் முன் மீதமுள்ள உரிமை கோருவதற்கான நிலுவை எந்த முகாந்திரத்தின் அடிப்படையில் அடமானத்தை நிலுவைத் தொகையை அடைத்து முடிக்கும் வரை வைத்துக் கொள்ள முடியும் போன்ற விபரங்களை வாடிக்கையாளருக்கு முன் கூட்டியே அறிவித்திடும்.

**(IV) பொது**

(அ) கடன் வழங்குதல், வாடிக்கையாளர்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் இருத்தல் மற்றும் தொழில் முறைகளிலும், வாடிக்கையாளர்களிடமும் நியாயமாக நடத்தல் போன்ற நல்ல செயல்முறைகளை உறுதியாக செயல்படுத்தும் விதத்தில், விருட்சம் தனது நன்னடத்தை விதிமுறைகளை தொடர்ந்து புதுப்பித்து வருகிறது.

(ஆ) நிறுவனத்தின் நன்னடத்தை விதிகள் எங்கள் கிளை அலுவலகங்கள், டிவிஷனல் / பிராந்திய அலுவலகங்கள், தலைமை அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் வலைத்தளத்திலும் (www.virutcham.org) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. விருட்சம் அமைத்துள்ள வசூலிக்கப்படும் வட்டி விகிதம் மற்றும் குறை தீர்க்கும் முறைகள் ஆகியவை அதன் அனைத்து அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அதன் ஆவண வெளியீடுகளிலும் (அந்தந்த பிராந்திய மொழியில்) நிறுவனத்தின் வலைதளத்திலும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

(இ) கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வழங்கப்பட்ட நோக்கங்களைத் தவிர, கடன் பெற்றவரின் விவகாரங்களில் தலையிடுவதை விருட்சம் தவிர்க்கிறது (புதிய தகவல்கள் இருப்பின், அவை முன்னர் கடன் பெற்றவரால் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில், கடன் கொடுத்தவரின் கவனத்திற்கு வரவில்லையென்றால் தலையிட நேரிடும்).

(ஈ) கடன் வாங்கியவரிடமிருந்து வாங்கிய கடனுக்கான கணக்கை மாற்றுவதற்காக கோரிக்கை வந்தால் பரிசீலிக்கப்படும். ஒப்புதல் அல்லது மறுத்தல், அதாவது விருட்சம் தரப்பில் ஆட்சேபனை ஏதேனும் இருந்தால், தகவல்கள் உள்ளடங்கிய கோரிக்கை பெறப்பட்ட 21 நாட்களுக்குள் தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய மாற்றம் சட்டத்திற்கு உட்பட்ட வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளின்படியே நடைபெறும்.

**(V) குறை தீர்க்கும் அதிகாரி :**

- விருட்சம் நிறுவனம் குறைகளைத் தீர்ப்பதற்கான விரிவான வழிமுறைகளை கொண்டுள்ளது. இது சச்சரவுகள் மற்றும் குறைகளை நியாயமான காலத்திற்குள் விசாரிக்கவும், தீர்வளிக்கவும் உறுதி செய்கிறது. கடன் பெறுபவர்களின் கடன் பாஸ் புத்தகத்திலும் வழங்கப்பட்ட தொடர்பு விவரங்களின் மூலம், தலைமை அலுவலகத்தில் நிறுவனத்தால் இதற்காகவே பணியமர்த்தப்பட்ட ஒரு குறை தீர்க்கும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

**(VI) மொழி மற்றும் நன்னடத்தை விதிமுறையை வெளிப்படுத்தும் விதம்:**

- பிராந்திய மொழியிலோ அல்லது கடன் பெறுபவர் புரிந்து கொள்ளும் ஏதோ ஒரு மொழியிலோ உரிய வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்பட்ட நன்னடத்தை விதிமுறைகள் நிறுவனத்தின் ஒப்புதலோடு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும். நிறுவனத்தோடு தொடர்புடைய பல்வேறு நபர்கள் அறிந்து கொள்ளும் விதமாக இந்த நன்னடத்தை விதிமுறைகள் நிறுவனத்தின் வலைதளத்தில் போடப்படும்.

**(VII) அதிக வட்டி கட்டுப்பாடு :**

(அ) நிதிச்செலவீனம், விளிம்பு தொகை மற்றும் இடர் பிரிமீயம் போன்ற தொடர்புடைய காரணிகள் கொண்டு, கடன்களுக்கான வட்டி விகிதத்தை தீர்மானிக்கும் வட்டிவிகித மாதிரியை விருட்சம் நிறுவனம் மேற்கொள்ளும்.

(ஆ) வட்டி விகிதங்கள் மற்றும் இடர் அபாயம் தரமிடல் அணுகுமுறை ஆகியவை எங்கள் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறும்.

(இ) வட்டி விகிதங்கள் வருடாந்திர வீதமாக இருக்க வேண்டும், இதனால் தங்கள் கடன் கணக்கிற்கு வசூலிக்கப்படும் சரியான வட்டி விகிதத்தை கடன் வாங்குபவர்கள் அறிந்து கொள்வர்.

(ஈ) மைக்ரோ.ஃபைனான்ஸ் கடன்களுக்கான வட்டி விகிதம் விருட்சம் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுமத்தால் அங்கிகரிக்கப்பட்ட “கடனுக்கான வட்டி கொள்கை” அடிப்படையிலும், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

**(VIII) கடன் ஒப்பந்தத்தில் தெரியப்படுத்த வேண்டியவை :**

அனுமதிக்கப்பட்ட கடன் தொகையை கடன் அங்கீகார கடிதம் வழியாக விருட்சம் நிறுவனம் தெரிவிக்கும். அதனுடன் கீழ்க்கண்ட விபரங்களை கொண்ட கடன் ஒப்பந்தம் பெறப்படும்.

1) கடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.
2) வட்டி கட்டணம், செயலாக்க கட்டணம் மற்றும் காப்பீட்டு சந்தா ஆகியவை உள்ளடக்கிய கடனுக்கான நிதிச்செலவு. (இதில் உரிய நிர்வாகக் கட்டணங்களும் அடங்கும்.)
3) கடன் பெறுபவரிடமிருந்து ஜாமின் தொகையோ / கடன் விளிம்பு தொகையோ வசூலிக்கப்பட மாட்டாது.
4) தாமதமாக திரும்ப செலுத்தப்படும் தவணைத் தொகைக்கு எந்தவொரு அபராதமும் விதிக்கப்படமாட்டாது.
5) கடன் தவணை அட்டவணை, வட்டி விகிதங்கள், சேவை கட்டணங்கள், முன்கூட்டியே திருப்பிச் செலுத்தும் கடன் மீதான கட்டணங்கள் போன்றவை உட்பட நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், விருட்சம் கடன் வாங்குபவருக்கு அவரது பிராந்திய மொழியில் அதுகுறித்த அறிவிப்பினை வெளியிடும். வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எதிர்காலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுவதை விருட்சம் உறுதி செய்கிறது. இது தொடர்பான உரிய நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் இணைக்கபட்டிருக்கும்.
6) கடன்களை அனுமதிப்பது (Loan Sanction) தலைமை அலுவலகத்திலும், கடன் வழங்குவது கிளை அலுவலகத்தில் செய்யப்படுகிறது. கடன் வழங்கல் செயல்பாடு கடன் அதிகாரி (Credit officer), மற்றும் கிளை அதிகாரியால் (Branch Officer), நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது.

**(IX) கடன் அட்டை விவரங்கள்**

கடன் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் கடன் வழங்கப்படும் நேரத்தில் கடன் அட்டை பிராந்திய மொழியில் வழங்கப்படுகிறது. அதில் பின்வரும் விவரங்கள் இடம் பெறும்.

- நடைமுறையில் உள்ள பெறப்படும் வட்டி விகிதம்.
- கடனுடன் தொடர்புடைய அனைத்து இதர விதிமுறைகள் நிபந்தனைகள்.
- கடன் பெறுபவரை அடையாளப்படுத்த தேவையான தகவல்கள்
- பணம் திரும்ப செலுத்தியதற்கான தகவல்களுடன் சேர்த்து செலுத்திய தவணைகள் மற்றும் இறுதியாக விடுவிக்கப்பட்டது உள்ளிட்ட தகவல்களையும் விருட்சம் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.
- குறு நிதி நிறுவனங்களுக்காக (MFI) அமைக்கப்பட்ட குறைதீர்க்கும் நடைமுறை மற்றும் உரிய (NODAL) அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண் குறிப்பிடப்பட வேண்டும்.
- கடன் அல்லாத பொருட்கள் வழங்கப்படுவது என்பது கடன் வாங்குபவர்களின் முழு ஒப்புதலுடன் நடைபெற வேண்டும். மேலும், அது குறித்த கட்டண முறை கடன் அட்டையிலேயே தெரிவிக்கப்படும்.
- கடன் வழங்கப்படும் போது, ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் - கடன் பெறுபவரின் தகவல்கள் குறித்த தனியுரிமை மதிக்கப்படும் என்ற உறுதி அளிக்கப்படுகிறது. விளம்பரங்கள், மார்கெட்டிங் தேவைகள் மற்றும் பிற பொது தேவைகளுக்காக அத்தகவல்களைப் பயண்படுத்த வாடிக்கையாளரிடமிருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெறப்படும்.
- நுண்கடன் பிரிவில் தகுதி வாய்ந்த சொத்துகளுக்கு (Qualifying Assets) எந்தவிதமான பிணையுமின்றி கடன்கள் வழுங்கப்படுகின்றன. தகுதி இல்லாத சொத்துகளைப் பொறுத்தவரை, அனைத்து பாக்கியையும் திருப்பிச் செலுத்தியவுடன் நாங்கள் அனைத்து அடமானங்களையும் திரும்ப வழங்கிவிடுவோம். அல்லது, கடன் பெற்றவருக்கு எதிராக வேறு ஏதேனும் மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள இருந்தாலோ, உரிய சட்டபூர்வ உரிமையைக் கொண்டு கடனின் நிலுவைத்தொகையைத் திரும்பப் பெற்ற பின்னர் அனைத்து அடமானங்களையும் திரும்ப வழங்கிவிடுவோம். அத்தகைய செட் ஆஃப் (set off) உரிமையைப் பயன்படுத்த நேர்ந்தால், மீதமுள்ள நிலுவை பற்றிய முழு விவரங்கள் கடன் பெறுபவருக்கு தெரிவிக்கப்படும். மேலும், எந்தெந்த சூழ்நிலைகளின் கீழ், சம்பந்தப்பட்ட நிலுவை முடிக்கப்படும் / செலுத்தப்படும் வரை அடமானத்தை தக்கவைத்துக் கொள்ள NBFC - களுக்கு உரிமை உள்ளது என்பதற்கான விளக்கமும் தெரிவிக்கப்படும்.

**(X) துஷ்பிரயோகமில்லாத கடன் மீட்பு முறை :**

- கடன்களை வசூலிக்கும் விஷயத்தில், பொதுவாக நியமிக்கப்பட்ட ஒரு சந்திப்பு இடத்தில் (மைய / குழு கூட்டத்தில்) நிலுவை மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 2 அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் கடன் பெற்றவர் நியமிக்கப்பட்ட அந்த இடத்திற்கு வரத் தவறினால் மட்டுமே, களப்பணியாளர்கள் அவர்கள் வசிக்கும் இடத்திற்கோ அல்லது கடன் வாங்கியவரின் பணியிடத்திற்கோ சென்று நிலுவையை மீட்க அனுமதிக்கப்படுவார்கள். முறையற்ற நேரத்தில் கடன் பெற்றவர்களை தொடர்ந்து தொந்தரவு செய்தல், கடன்களை மீட்பதற்கு உடல் பலத்தை பயன்படுத்துதல் போன்ற தேவையற்ற துன்புறுத்துதலை விருட்சம் ஊக்குவிப்பதில்லை.

**(XI) உள் கட்டுப்பாட்டு அமைப்பு முறை :**

- நிறுவனத்திற்குள் நியமிக்கப்பட்ட நபர்களுக்கு பொறுப்பை வழங்குவதற்கும், தணிக்கை மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு உள்ளிட்ட உள் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுவதற்கும் விருட்சம் நிறுவனம் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்.

*********************************************************************************************